Individual copy

003230

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை –கரூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.(லேட்)ந.ஜெயந்திராணி என்பவரின் மகள் செல்வி.ம.ஜெ.அஸ்வதி, இளநிலை உதவியாளர் நிலையில் பணி நியமனம் செய்தது– பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை

அரசாணை (4ப) எண்:19

நாள்: 17.05.2022
சுபகிருது, வைகாசி 03
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.பவ4/2469/2020, நாள் 16.06.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.55572/2021/டி2, நாள் 23.10.2021.

-----

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 19.03.2020 அன்று பணியிடைக்காலமான திருமதி.(லேட்)ந.ஜெயந்திராணி என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.ம.ஜெ.அஸ்வதி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறையின்படி கருணை அடிப்படையில், கரூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 23.06.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2.மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில், பணியிடைக்காலமான திருமதி.(லேட்)ந.ஜெயந்திராணி, வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 18.02.2001 பிற்பகல் அன்று நிறைவு செய்துள்ளார் என்றும், அவரது வாரிசுதாரரான அவரது மகள் செல்வி.ம.ஜெ.அஸ்வதி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 04.05.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 27.04.2002 என்றும், தனியர்

(த.பி.பா.)

தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10-ம் வகுப்பு) மார்ச் 2017 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.ம.ஜெ.அஸ்வதி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் 23.06.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.7916/ட்டி1/2022, நாள் 27.04.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.efile/991/G3/2022, நாள் 01.05.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
✓மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18.
கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை ஆணையர்,
சென்னை-35.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கரூர் மாவட்டம்.

<u>நகல்:</u>
செல்வி.ம.ஜெ.அஸ்வதி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, கரூர் மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சே.சாந்தி 18/05/2022
பிரிவு அலுவலர்

18/5/2022

மே.கு.ந.க.ப4/2469/2020, மாவட்ட ஆட்சியரக(வளர்ச்சி) பிரிவு,
நாள். .05.2022 கரூர்

"அரசாணை(4ப) எண்.19,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ6)துறை,நாள்.17.05.2022–ன்
நகல் சார்வு செய்யப்படுகிறது"

மாவட்ட ஆட்சியருக்காக,
கரூர்.

3/4

பெறுநர்,
செல்வி.ம.ஜெ.அஸ்வதி,
இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்),
கரூர்–(உரிய வழியாக).

நகல்:– ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சியரகம்,கரூர்.

நகல்:–பவ4– முக்கிய ஆணை தொகுப்பிற்கு.

ந.க.அ1/2189/2021
நாள் :- .06.2022

உதவி இயக்குநர் (ஊ)
அலுவலகம்,
கரூர்.

"சம்மந்தப்பட்ட அலுவலருக்கு நகல் சார்வு செய்யப்படுகிறது"

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்
(ஊராட்சிகள்)
கரூர் மாவட்டம்.

6.6.22

பெறுநர்:
(1) செல்வி. ம.ஜெ.அஸ்வதி,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊ)
அலுவலகம்,
கரூர்.